# தேம்பாவணியில் கவியியல் திறன்

*முனைவர் பா. வைடூரியம்மாள்*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6413

***ஆய்வுச் சுருக்கம்***

*மக்களின் வாழ்வைப் பிரதிபலிக்கும் கண்ணாடி இலக்கியமாகும். இவ்விலக்கியம் மக்களை நெறிப்படுத்தவும், மேல்நிலைக்கு கொண்டு வரவும் காரணமாக அமைகிறது. இலக்கியம் படைப்பவரின் நோக்கத்திற்கு ஏற்கவும், திறனுக்கேற்பவும் தனிநிலைப் பாக்களாகவோ, தொடர்நிலைப் பாக்களாகவோ இயற்றப்படுகிறது. அதிலே நீண்ட நெடும் கதைப்போக்கு உடையவை பெருங்காப்பியம் எனப்படுகிறது. தமிழ்க் காப்பியங்கள் அனைத்தும் சமய அடிப்படையிலேயே அமைந்துள்ளன. அவ்வகையில் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய தேம்பாவணி பல கவியியல் கூறுகள் நிறைந்ததாக இயற்றப்பட்டிருக்கிறது. தாய் மொழி தமிழ் அல்லாத வீரமாமுனிவரால் இயற்றப்பட்ட தேன்தமிழ் ஒழுகும் காப்பியமான தேம்பாவணியில் கவியியல் திறன்களை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.*

## முன்னுரை

தொன்மையான தமிழுக்கு கிறித்தவ சமயம் வழங்கிய இலக்கிய கொடைகள் பலவாகும். அவை காப்பியம், உரைநடை, சிறுகதை எனப் பலவகைப்படுகின்றன. தமிழில் உள்ள கிறித்தவக் காப்பியங்களுள் முதன்மை வாய்ந்தவைகளாகப் போற்றப்படுபவை இரட்சணிய யாத்திரிகமும் தேம்பாவணியும் ஆகும். இவற்றுள் தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத, வெளிநாட்டவரால் இயற்றப்பட்டது என்னும் பெருமை தேம்பாவணிக்கே உண்டு. விவிலியத் திருமறையின் சாரமாக, காப்பியமாக இயற்றப்பட்டுள்ளது. இக்காப்பியத்தில் கவியியல் திறனை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது

## தேம்பாவணியின் சிறப்பு

உலகக் காப்பியங்களுள் தேம்பாவணி தனி இடம் பெறுகிறது. ஒரு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிராத ஒருவரால், அம்மொழியில் படைக்கப்பட்டதாக, உலக வரலாற்றில் வியக்கத்தக்கதாக அமைகிறது. இத்தாலி நாட்டுத் துறவியான வீரமாமுனிவர் தமது முப்பதாம் வயதைக் கடந்து, தமிழகம் வந்து, நன்கு தமிழ்மொழியைக் கற்று அதிலே திறன் பெற்று படைத்த அரிய காப்பியமாகத் திகழ்கிறது.

தேம்பாவணி என்றால் வாடாத மாலை என்றும் தேன் போன்ற பாக்களால் ஆனது என்றும் பொருள் உண்டு என்று இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சிவராசா ஓசாநிதி குறிப்பிடுகிறார்.

இக்காப்பியம் மரியாள் என்னும் கன்னியாஸ்திரி ஸ்பானிய மொழியில் எழுதிய The City of Hod என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டதை அறியமுடிகிறது.

புலமை ஒன்றையே வாழ்வியலாகக் கொண்டிராத வீரமாமுனிவரால் பல பரந்து பட்ட அறிவின் துணை கொண்டு தேம்பாவணியை இயற்றியதால் இவர் "தமிழ் முனிவருள் ஒரு தனி முனிவர்"[1] எனப் போற்றிச் சிறப்பிக்கப்படுகிறார்.

காப்பியம் என்பது அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பொருளை விளக்க வேண்டும் என்பது மரபு. தேம்பாவணியும் "அறம் முதல் விளங்கச் சொல்வோம்"[2] என ஆரம்பிக்கப்பட்டாலும் இன்பம் என்ற சிற்றின்பத்தைதை இக்காப்பியம் கூறவில்லை என்பதைக் காண முடிகிறது. காப்பியத் தலைவன் வளன் என்னும் சூசையும் தலைவி மரியும் உடல் இன்பத்தை ஒதுக்கி துறவினை மேற்கொள்ள முனைந்ததைக் காப்பியம் விளக்குகிறது.

சந்த மணம் வீசி பாவகையால் மிகுந்து பாடப்பட்டுள்ளது. காப்பிய ஆசிரியர் தமது காப்பியத்தை 3615 பாக்களாலும், 36 படலங்களாகவும் படைத்துள்ளதைக் கோடிட்டுக் காட்டியவழி தேம்பாவணியில் இடைச்செருகல் எதுவும் நிகழாதிருக்கக் காரணமாக அமைகிறது எனலாம்.

## கவியியல் திறன்

படிப்பவர்களை, கற்பனைவழி உணர்வுகளையும், அனுபவத்தையும் கருத்தையும் தெரிவிப்பவை கவிதைகளாகின்றன. இவற்றில் உட்குறிப்புத் தன்மை, இறுக்கமான வெளிப்பாடு, மொழியாளுகை, ஒலிக்குறிப்பு ஆகியன கவியியல் கூறுகளாக அமைகின்றன. வீரமா முனிவர் கேள்விச் செல்வம் மிக்கவர். நுண்ணிய புலமையாளர். நூற்களின் கடலினைக் கடந்தவர். இத்தகு சிறப்பு பெற்ற இவரால் கவியியல் கூறுகள் பொருந்த தேம்பாவணி காப்பியம் படைக்கப்பட்டிருக்கிறது எனலாம்.

இக்காப்பியக் கூறுகளை,

1. இலக்கிய மேற்கோள்
2. அணிகள் வரும் தன்மை
3. செய்யுளின் பா அமைப்பு
4. புது மொழி மரபு
5. நாட்டுப்புறவியல் கூறுகள் எனப் பிரித்துக் காணலாம்.

## இலக்கிய மேற்கோள்

இலக்கியங்களில் ஒப்புமை, மேற்கோள் என்பது அனைத்து இலக்கியங்களிலும் காணப் படக்கூடிய ஒன்றாகும். இலக்கியப் பாடல் வரிகள் பல திரைப்படப்பாடல்களாக ஆக்கப்பட்டிருப்பதையும் காணமுடிகிறது. ஷெல்லியின் மீதும் அவர் கவிதை மீதும் கொண்ட ஈர்ப்பால் பாரதியார் ஷெல்லிதாசன் ஆனது போல், பாரதியார் மீது கொண்ட ஈர்ப்பால் கனகசுப்புரத்தினம் பாரதிதாசன் ஆனதுபோல் வீரமாமுனிவர் பல தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளால் ஈர்க்கப்பட்டிருக்கிறார். அதிலும் குறிப்பாகத் திருவள்ளுவர், கம்பர், திருத்தக்கத்தேவர் ஆகியோாரின் கவி வரிகளால் கவரப்பட்டு, அவற்றைத் தமது காப்பியமான தேம்பாவணியில் மேற்கோளாக்கிகையாண்டிருக்கிறார்.

தேம்பாவணியில் திருக்குறள், கம்பராமாயணம் சீவகசிந்தாமணி என்னும் மூன்று இலக்கியங்களில் திருக்குறளே மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளது. "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல"[3] என்னும் குறள் "கிழிபடக்கீறும் அவர்க்கும்"[4] என்றும், "தொட்டணைத் தூறும் மணற்கேணி"[5] என்னும் குறள் "கேணி அறல் இறைத்த அளவு உந்தி ஊறும் என"[6] என்றும் "நன்றி மறப்பது நன்றன்று"[7] என்னும் குறள் " நன்றி மறப்பத தீது"[8] என்றும் கிட்டத்தட்ட 24 குறள்கள் தேம்பாவணியல் தொடராக எடுத்தாளப்பட்டுள்ளமையைக் காண முடிகிறது.

கம்பா, கம்கராமாயணத்தில் கூறப்பட்ட பாடல்வரிகளும் கம்பர் பயன்படுத்திய சில சொற்களும் காப்பியத்திற்கு ஏற்றாற்போன்றும், செய்யுளுக்கு உகந்த வகையிலும் தேம்பாவணியில்

மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கம்பராமாயணத்தின் படலத் தலைப்புகளும், தேம்பாவணியில் காட்சிப் படலம், சித்திரைப் படலம், மீட்சிப்படலம் என மேற்கோளாக்கி தலைப்புகளாக்கப் பட்டிருக்கின்றன. பல இடங்களில் கம்பராமாயணத்தில் இருந்து வேறுபட்டு கற்பனையில் மிகுந்து, சொல்லில் நயத்துடன், ஆசிரியரின் தனித் திறமையை, புலமைத் திறனை ஆகியவற்றைத் தேம்பாவணி கூறுகிறது.

## அணிகள் வரும் தன்மைகள்

உடலின் அழகை மெருகூட்டுவன அணிகலன்கள். அதைப்போன்று செய்யுளுக்கு அழகூட்டுவன அணிகள் ஆகும். இது ஒரு செய்யுளை சொல்லாலும் பொருளாலும் அழகுபட எடுத்துரைக்கின்றது. அணி இலக்கணத்தை நன்கு உணர்ந்த வீரமா முனிவரால் காப்பியமான தேம்பாவணியில் பல அணிகளைக் கையாண்டு பாடல் எழுதப் பட்டுள்ளது. வீரமாமுனிவர், உலகில் தாம் நேரில் கண்டு உணர்ந்த செயல்களை உவமையாக்குவதில் வல்லவர் என்பதை தேம்பாவணி காப்பியமும் எடுத்துரைக்கின்றது. இக்காப்பியத்தில் அணிகளுக்கு எல்லாம் தாயணியாகிய உவமை அணியை 39 பாடல்களில் குறிப்பிட்டிருக்கிறது. உருவகத் திறத்தோடும் பாடல்கள் பாடப்பட்டிருக்கிறது.

“சீவக சிந்தாமணி, புறநானூறு, நாலடியார், கலித்தொகை, அரிச்சந்திர புராணம், யாப் பெருங்கலக் காரிகை போன்றவற்றின் பகுதிகளை உவமைத் தொடர்களாகத் தேம்பாவணியில் வீரமா முனிவர் காட்டியுள்ளார்”[9] என ஆசிரியர் சுந்தரமும் குறிப்பிடுகிறார். உவமை, உருவகம் போன்றவற்றைப் போன்றே ஊகாஞ்சிதம் எனப்படும் தற்குறிப்பேற்றத்தையும் தேம்பாவணியில் பல இடங்களில் காண முடிகிறது. அதைப்போன்று வழங்க, வளர்ந்த, எழுந்த, அணிந்த, மழை, விளைநிலா, அணி போன்ற சொற்களை சொற்பொருள் பின்வருநிலையணிகளாக அமைத்துப் பாடிய பாடல்கள் பலவும் காணப்படுகின்றன.

அணிகள் சொல்லணி, பொருளணி என இருவகைப்படும். அதில் சொல்லணிகளை மறிநிலையணி, சொன்மிக்கணி, சொல்லெஞ்சணி, சொல்லொப்பணி என வீரமாமுனிவர் வகைப்படுத்தி இருக்கிறார். “வந்த சொல் மீண்டும் வருவது சொன்மிக்கணி எனப்படும். இவையே மடக்கும் இசையந்தாதியும், அடுக்குமென மூவகையாகும்”10 என அதன் வகைகளையும் கூறுகிறார். இதில் மடக்கணி மிகுந்த பாடல்களும் தேம்பாவணியில் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

## செய்யுளின் பா அமைப்பு

ஒரு மொழியில் செய்யுள் இயற்றும்போது அதன் படைப்புச் சிறப்பும், சிக்கலும் நன்கு உணர்ந்து தெளிந்து இயற்ற வேண்டும். ஏனெனில் செய்யுளுக்கு அழகு சேர்ப்பது பா நலம் மட்டுமே ஆகும். இதனை நன்கு உணர்ந்த வீரமாமுனிவர் தேம்பாவணியின் பல இடங்களில் பாவின் சிறப்பினை எடுத்துக் கூறியிருக்கிறார். மிகுந்த புகழினைக் கூறும்போதும், நற்பண்புகள் நிறைந்த திருக்குடும்பத்தினைக் கூறும்போதும்,

**“பாவிடைப் புகழ் எழ”**[11]

**“சீர்பாய் பாவிற்கு உரையோய் நீ”**[12]

என பாவின் மேலானத் தன்மையர் என்று பா நலனை உணர்த்தியிருக்கிறார்.

இலக்கியத்தைப் பாடும்போது உலகம் என்னும் சொல்லை முதன்மையாகக் கொண்டு பல புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அதிலே கம்பர் “உலகம் யாவையும் தாமுள வாக்கலும்”[13] என்றும், சேக்கிழார் பெருமான், “உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்”[14] என்றும், நக்கீரர் “உலகம் உவப்ப வலனேர்பு திரிதர”[15] என்றும் உலகத்தைத் தொடக்கமாகக் கொண்டு பாடியிருக்கிறார்கள். இவை மங்கலமாகவும் கருதப்பட்டிருக்கிறது.

காப்பியம் பாடும்போதும் மங்கலச் சொற்களைக் கொண்டு பாடுதல் என்பதும் மரபாகப் போற்றப்பட்டது. அந்த வகையில்

தேம்பாவணியில் 20க்கும் மேற்பட்ட மங்கலச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அதிலும் உலகம் என்பதை முதன்மையாகக் கொண்டு சீரிய என்னும் மங்கலச் சொல்லை அதற்கு அடைமொழியாக்கி காப்பியம் "சீரிய உலக மூன்றும்"[16] என்னும் சொற்றொடரில் பாடப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

காப்பியத்திற்கு என்று இலக்கண விதிகள் கூறப்பட்டிருக்கின்றன. பெருங்காப்பியம் என்பது 34 உத்திகளைக் கொண்டிருக்க வேண்டும். இவற்றில் ஒன்று அல்லது இரண்டு உத்திகள் குறைந்து வந்தால் அவை சிறு காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அந்த வகையில் பெருங்காப்பியம் என்பது வாழ்த்து, வணக்கம், வருபொருள் என்னும் மூன்றில் ஏதேனும் ஒன்றினை முதன்மையாகக் கொண்டு பாடப்பட்டிருக்க வேண்டும் என்பது தண்டியலங்கார விதி. இதனை,

**"வாழ்த்து வணக்கம். வருபொருள் இவற்றின் ஒன்று**
**ஏற்புடையதாகி முன் வரவியன்று**
**நாற்பொருள் பயக்கும்"[17]**

எனக் கூறுகிறது. இதனடிப்படையில் தமிழ்க் காப்பியங்களில் ஏதேனும் ஒன்று முன்வர தொடர்ந்து காப்பியக் கதைக்குள் ஆசிரியர் சென்று விடுவார். ஆனால் தேம்பாவணியிலோ நான்கு காப்பியக் கூறுகளும் முதல் பாடலிலேயே பொருத்திக் கூறப்பட்டுள்ளது. இறைவனை வாழ்த்தி, வணங்கி, தான் எதனைக் கூறப் போகிறேன் என்பதைக் கூறி, அறம், பொருள், இன்பம், வீடு நான்கினையும் எடுத்துரைக்கிறார். இது இவரின் புலமைத் திறனை எடுத்து ரைப்பதாக அமைகிறது.

தேம்பாவணியில் பல இடங்களில் இனிமை தரக்கூடிய சொற்களை நயமாகப் பயன்படுத்தி தொடைநயம் பேணப்பட்டிருக்கிறது. நான்கு வரிப் பாடலில் முரண் தொடை அமைத்து ஒரே பொருளில் பாடப்பட்டிருக்கிறது.

**"அளித்து அழிப்ப**
**நேரிய எதிர் ஒப்பு இன்று"[18]**

என்று முச்சீர்களில், நான்கு சொல்லில், நான்கு முரண் அமைத்துப் பாடப்பட்டு தொடை நயம் சிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

## புதுமொழி மரபு

தாய்மொழி தமிழல்லாத வீரமாமுனிவர் தேம்பாவணியல் பல இடங்களில் மொழி கையாடலில் புது மரபினைப் போற்றி இருக்கிறார். அவை,

இகரம் அதாவது குற்றியலிகரம் தமிழ் இலக்கண நெறிப்படி யகர இறுதிக்கு முன்னால் வராது. ஆனால் வீரமாமுனிவர் "வரவோய் யார்?" என குற்றியலிகரத்தைப் பயன்படுத்தி இருக்கிறார்.

தன்மை பன்மை வடிவமான நாம் என்பதை யாம் என்று பயன்படுத்தியிருக்கிறார்.

பல இடங்களில் சுட்டுப் பெயர்களையே சாரியைகளாக்கி சீர்களாக்கிப் படைத்திருக்கிறார்.

இடைச் சொற்களை குறித்த சொற்களோடு இணைக்காமல் இரண்டு சீர்களாக்கி இருக்கிறார்.

சொல்லாக்கத்திலும் பல மாற்றங்களை நிகழ்த்தியுள்ளார். வல்லினம் வரும் இடங்களில் மெல்லினமும், மெல்லினம் வரும் இடங்களில் இடையினமும் என சொல் மாற்றத்தையும் செய்துள்ளார்.

## நாட்டுப்புறக் கூறுகள்

மக்களின் சமய நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே நாட்டுப்புறக் கூறுகள் அமைகின்றன. இவை மனிதனின் சமயம், வாழ்வியல் சடங்குகள், தொன்மம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைகின்றன. தேம்பாவணியில் கூறப்பட்டிருக்கும் கிளைக் கதைகள் அனைத்தும் புராணவியலைக் கூறும் கூறுகளாகவே அமைகின்றன. தாவிது கோலியாத் நிகழ்வு வீரப்பண்பை புராணத்தைக் கூறுவதாக அமைகிறது.

நாட்டுப்புறவியல் கூறுகளில் முக்கியமானவை பறவைகள், விலங்குகள். இவை குலக்குறிச் சின்னங்களாககருதப்பட்டன.தேம்பாவணியில் முயல் ஆமைக் கதைகள், ஈசாப் கதைகள்

போன்றவை எல்லாம் தமிழகத்தில் வழங்கி வரும் விலங்குக் கதைகளாகும். இவற்றை உள்ளடக்கியதாக தேம்பாவணி அமைகிறது.

தேம்பாவணியின் பல இடங்களில் பழமொழிகளும், ஒலிநயப் பாடல்களும், வந்த சொல்லோ தொடரோ திரும்ப திரும்ப வரும் நாட்டார் வழக்காற்றியல் பாடல் போன்று பல பாடல்கள் காணப்படுகின்றன. பல பேச்சு மொழிச் சொற்களைக் கொண்டதாகவும் அமைகின்றன.

## முடிவுகள்

வீரமாமுனிவரால் இயற்றப்பட்டத் தேம்பாவணிக் காப்பியம் தமிழ் மொழியின் சிறப்பினை பறைசாற்றுவதாக அமைந்திருப்பதை அறியமுடிகிறது.

தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் செய்த வீரமாமுனிவர் தாம் படைத்த காப்பியத்திலும் அம்மாற்றத்தை நிகழ்த்தியுள்ளதை தேம்பாவணியின் வழி அறியமுடிகிறது.

உவமை, உருவகம் மடக்கணி என அணி நலம் சிறந்த காப்பிமாகத் தேம்பாவணி திகழ்கிறது என்பதையும் காணமுடிகிறது.

வளனின் கதையை அனைவரும் படிக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் பல நாட்டுப்புறவியல் கூறுகளுடன் எழுதப்பட்டிருப்பதையும் உணரமுடிகிறது.

## மேற்கோள்


1. திருமொழி ஒரு மொழி ப.36, தமிழரசன் பதிப்பகம்
2. பாயிரம் 1
3. திருக்குறள் 151
4. தேம்பாவணி 11
5. திருக்குறள் 396
6. தேம்பாவணி 131
7. திருக்குறள் 108
8. தேம்பாவணி 35
9. சுந்தரம்.ஜே.ஜி, தேம்பாவணி ஆராய்ச்சி, ப.25, தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி
10. தண்டியல்காரம்
11. தேம்பாவணி 3
12. தேம்பாவணி 142
13. கம்பராமாயணம் பா1
14. பெரியபுராணம் பா1
15. திருமுருகாற்றுப்படை பா1
16. தேம்பாவணி பா1
17. தண்டியல்காரம் 8